உயர்திரு காவல் துறை ஆணையர்
எழும்பூர்
சென்னை 600 008

பொருள் : பொதுமக்கள் உபயோகத்தில் உள்ள இடத்தை ஆக்கிரமித்து கடை மற்றும் வீடு கட்டுதல், **சில்வர்பீச் ரோட்டரி கிளப் 3230** பொதுமக்களுக்கு கட்டி கொடுத்த தண்ணீர் தொட்டியை 14 வருடங்களாக தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வரும் ஆனந்தனை கேட்டதற்கு கொலை மிரட்டல் மற்றும் போலிஸ் பொய்புகார் கொடுக்கிறார். **என் உயிருக்கு பாதுகாப்பு வேண்டி**

-----------------------------------

அய்யா,

வணக்கம். குறிப்பிட்டுள்ள முகவரியில் கடந்த 34 வருடங்களாக குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஆனந்தன் என்பவர் அதே பகுதியில் **இரு மனைவி**, பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். அவர் பல வருடங்களாக இப்பகுதியில் காலியாக உள்ள இடத்தில் எல்லாம் அரசாங்க அதிகாரிகளை கைக்குள் போட்டுக் கொண்டு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் “C” பிளாக் மற்றும் “D” பிளாக் இணையும் இடத்தில் சுமார் 300 சதுர அடியில் தரைபகுதியில் கடையும் படிகட்டும், மேல்தளத்தில் 300 சதுர அடியில் வீடும் கட்டியுள்ளார். மேலும் கடைகளை கட்டி விற்பதும் அவர் உறவினர்களுக்கு கடைகள் அமைத்து தருவதுமாக இருந்த நிலையில் குடிசை மாற்று வாரிய பகுதியில் உள்ள ஆட்கள் இல்லாத வீட்டில் பூட்டை உடைத்து தன்னுடைய வீடு என்று கூறி வீட்டை கைப்பற்றி இருந்தார். அதன் சம்மந்தமாக வீட்டின் உரிமையாளர் அவர் செய்த தவறுகளை போலிஸில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அவர் கேபிள் டி.வி. நடத்தி வருகிறார். படம் சரிவர தெரியவில்லை என்று பகுதி மக்கள் தங்கள் சொந்த விருப்பத்திற்காக டிஷ் டிவி பொருத்தினால் அவர்களை மிரட்டி இங்கு கேபிள் டி.வி மட்டும் தான் பார்க்கவேண்டும், மீறி பார்த்தால் உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டியதில்